1981 மார்ச் 25]

வேதாரண்யம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 481— திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் பேரூராட்சிக்கு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) ஆய்வு வேலைகள் தமிழ்நாடுகுடிநீர் வடிகால் வாரியத்தினால் நடைபெற்று வருகின்றன. அவை துரிதப்படுத்தப்படுகின்றன.

நாகர்கோவில் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம்

*வினா எண் 482— திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு வீட்டு மனைகள் வாங்குவதற்காக தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் கடன் வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) மொத்தக் கடனாக ரூ. 31,65,625 வழங்கப்பட்டுள்ளது.

திரு. ஜே. எஸ். இராசு: தலைவரவர்களே, கிரயம் வாங்குவதற்கு முன்பாக சேல்ஸ் அக்ரீமெண்ட் போடப்பட்டதா? அது மத்திய சங்கத்திற்கு அனுப்பப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மத்திய சங்கத்திற்கு அனுப்பித்தான், அவர்கள் அனுமதி பெற்றுத்தான் செயல் பட்டிருக்கிறார்கள். இந்தக் கடன் ஒரே தவணையில் வழங்கப்படவில்லை; மூன்று தவணைகளில் முறையாக வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் நன்கு செயல்படும் சங்கங்களில் இதுவும் ஒன்றாக இருக்கிறது. கடன் வழங்கப்பட்ட விவரம்:—

25–10–1979 ஆம் தேதி ரூ. 3,87,500.

19–12–1979 ஆம் தேதி ரூ. 1,97,125.

11–4–1980 ஆம் தேதி ரூ. 25,81,000.

இந்த முறையில் கடன் பெற்றிருக்கிறார்கள்.